டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 18.10.2019 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.7, Issue: 104 - Madurai | Online Edition

பட்டின் ராஜாங்கம்
ARRS சில்க்ஸ்
சேலம் | நாமக்கல் | ஓசூர் | காஞ்சிபுரம்

# கால்நடைகளின் எண்ணிக்கை 5% உயர்வு 20வது கணக்கெடுப்பில் தகவல்

## பசுக்களின் எண்ணிக்கை 18% உயர்வு

புது தில்லி, அக். 17

நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கை 5 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாக 20வது கால்நடை கணக்கெடுப்பு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம், மீன்வளத் துறைகள் இணைந்து 20வது கால்நடை கணக்கெடுப்பு அறிக்கையை வியாழக்கிழமை வெளியிட்டன. இந்த அறிக்கையானது கொள்கை வகுப்பாளர்களுக்கு மட்டுமல்லாமல் வேளாண் விஞ்ஞானிகள், வர்த்தகர்கள், தொழில் முனைவோர், பால் துறையினர் மற்றும் பொதுமக்களுக்கும் பயன்தரக்கூடியதாக இருக்கும் என்று அரசு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் :

தற்போது நாட்டில் உள்ள மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 535.78 மில்லியனாக உள்ளது. 2012ம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் இது 4.6 சதவீதம் அதிகமாகும்.

இதில் பொலி மாடுகளின் எண்ணிக்கை 302.79 மில்லியனாக உள்ளது. இது முந்தைய கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் 1 சதவீதம் அதிகமாகும். அதேவேளையில் காளைகளின் எண்ணிக்கை 0.8 சதவீதம் அதிகமாக 192.49 மில்லியனாக உள்ளது.

பசுக்களின் எண்ணிக்கை அதிகபட்சமாக 18 சதவீதம் உயர்ந்துள்ளது. தற்போது பசுக்களின் எண்ணிக்கை 145.12 மில்லியனாக உள்ளது. உயர் இன, கலப்பின மாடுகளின் எண்ணிக்கை 50.42 மில்லியனாகவும், உள்நாட்டு மற்றும் வகைப்படுத்தப் படாத காளைகளின் எண்ணிக்கை 142.11 மில்லியனாகவும் இருக்கும். அதேவேளையில் உள்நாட்டு மற்றும் வகைப்படுத் தாத பசுக்களின் எண்ணிக்கை முந்தைய கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

மொத்த அளவில் உயர் இன மற்றும் கலப்பின காளைகளின் எண்ணிக்கை முந்தைய கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் 26.9 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேவேளையில் மொத்த எருமைகளின் எண்ணிக்கை 1 சதவீதம் அதிகரித்து 109.85 மில்லியனாக இருக்கும்.

புதிய கணக்கெடுப்பின் படி பால்தரும் மாட்டினங்களின் எண்ணிக்கை 6 சதவீதம் அதிகரித்து 125.34 மில்லியனாக உள்ளது. புதிய கணக்கெடுப்பின் படி கன்றுகளின் எண்ணிக்கை 14.1 சதவீதம் அதிகரித்து 74.26 மில்லியனாக உள்ளது. அதேவேளையில் மொத்த ஆடுகளின் எண்ணிக்கை 10.1 சதவீதம் அதிகரித்து 148.88 மில்லியனாக உள்ளது. பன்றிகளின் எண்ணிக்கை 12.03 சதவீதம் அதிகரித்து 9.06 மில்லியனாக உள்ளது. இதர குதிரை, கழுதை, ஒட்டகம் உள்ளிட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 1.24 மில்லியனாக உள்ளது.

நடப்பு 2019-20ம் ஆண்டில் தொடர்ச்சியாக கால்நடை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நகர்ப்புறம், கிராமப்புறங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் விலங்குகள் இந்தக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

மொத்த பண்ணைக் கோழிகளின் எண்ணிக்கை 16.8 சதவீதம் அதிகரித்து 851.81 மில்லியனாக உள்ளது. அதேவேளையில் பண்ணைப் பறவைகளின் எண்ணிக்கை 317.07 மில்லியனாக உள்ளது. இது முந்தைய கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் 46 சதவீதம் அதிகமாகும். அதேவேளையில் இறைச்சிக் கோழிகளின் எண்ணிக்கை 4.5 சதவீதம் அதிகரித்து 534.74 மில்லியனாக உள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மழை வாய்ப்பு

சென்னை, அக். 17

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் புவியரசன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நேற்று முன்தினம் (16ம் தேதி) முதல் வடகிழக்கு பருவமழை தொடங்கியது. இதனையடுத்து பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்தது. இந்நிலையில் சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் புவியரசன் செய்தியாளர்களிடையே பேசினார். அவர் கூறியதாவது : வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், நீலகிரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, திருவள்ளூர், திருவண்ணாமலை, நெல்லை, தூத்துக்குடி, சிவகங்கை ஆகிய 14 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக் கூடும்.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக எட்டயபுரம் 14 செ.மீ., கன்னியாகுமரி மற்றும் கொடைக்கானலில் தலா 13 செ.மீ., கடலாடி 12 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. மாலத்தீவு, லட்சத்தீவு, கேரள கடல் பகுதிக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம். இவ்வாறு புவியரசன் கூறினார்.

வடகிழக்கு பருவமழை காரணமாக அடுத்த 5 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் எனவும், இந்திய வானிலை ஆய்வு மையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தமிழகத்தின் பெரும் பாலான மாவட்டங்களில் நேற்று நள்ளிரவு முதல் கனமழை பெய்தது.

சென்னையில் கிண்டி, ஈக்காட்டுத்தாங்கல், தி.நகர், அண்ணாநகர், திருவல்லிக்கேணி, விமான நிலையம், பல்லாவரம், அனகாபுத்தூர், பெருங்களத்தூர், குரோம்பேட்டை, தாம்பரம், வண்டலூர், நுங்கம் பாக்கம், கோடம்பாக்கம், வளசரவாக்கம், வடபழனி, பம்மல், ஆவடி, அம்பத்தூர், பாடி, அயனாவரம், எழும்பூர், முகப்பேர் உள்ளிட்ட நகரின் பல்வேறு இடங்களிலும், சென்னையின் புறநகர் பகுதி களிலும் விடிய விடிய கனமழை கொட்டியது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர் agridoctor.in Agri Digital daily | காலைமணி.காம் kaalaimani.com Business Digital Daily

# தலையங்கம் பேசுகிறது

18.10.2019 வெள்ளிக்கிழமை



## என்று தணியும் இந்த வறுமையின் சோகம்

சமீபத்தில் சாம்சங் நிறுவனம் தனது மடிக்கத்தக்க மொபைல் போனை அறிமுகம் செய்ய முன்பதிவுக்கு அழைப்பு விடுத்திருந்தது. ரூ.1,65,000 மதிப்புள்ள இந்த புதிய போன் முன்பதிவு சுமார் 30 நிமிடத்தில் முடித்து விட்டனர். 1200 போன்களும் விற்றுவிட்டன. இது இந்தியாவின் ஒரு பக்கம் என்றால், 6 மாதம் முதல் 23 மாதங்கள் வரையிலான குழந்தைகளில் கிட்டத்தட்ட 10 சதவீதம் பேருக்கு மட்டுமே தினமும் குறைந்தபட்சம் ஏற்கத்தக்க சத்துணவு கிடைப்பதாக சர்வதேச ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ள செய்தி இன் னொரு பக்கம். அதாவது நாட்டின் வறுமை இன்றும் முற்றிலுமாக நீங்கவில்லை.

சர்வதேச வறுமைக்குறியீடு குறித்த ஆய்வின் படி 117 நாடுகளில் இந்தியாவுக்கு 102வது இடம் கிடைத்துள்ளது வேதனை தரத்தக்க செய்தியே. பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸ்ரீலங்கா ஆகிய நாடுகள் நம்மைவிட வறுமை ஒழிப்பில் பலபடிகள் முன்னேறியிருப்பது தெரியவந்துள்ளது. பாக்கிஸ்தான் 94ம் இடமும், பங்களாதேஷ் 88ம் இடமும், ஸ்ரீலங்கா 66வது இடத்திலும் உள்ளது குறிப்பிடத் தக்கது. பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு என்பது மட்டுமே நாட்டின் வறுமை ஒழிப்பில் மிகப்பெரும் பங்களிப்பை அளிக்கவில்லை என இதன் மூலம் தெரிய வரு கிறது. அது மட்டுமல்லாமல், கல்வியறிவு, சுகாதாரம், ஆரோக்கியம் குறித்த விசயங் களில் கவனம் செலுத்தினால் மட்டுமே, ஊட்டச்சத்து குறைபாடுகளை களையத்தக்க வழிவகைகளை கண்டறிய முடியும் என்றும் இந்த ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆரோக்கியமான குழந்தைகளாலேயே வளமான இந்தியாவை உருவாக்க முடியும். அதனை அவர்களுக்கு வழங்க முடியாது இருப்பது துரததிர்ஷ்டமே.

வறுமை ஒழிப்பில் மிகப்பெரும் அளவில் நாம் சிறப்பான செயல்பாடுகளை இதுவரை மேற்கொண்டு இருந்தாலும், அதிகரித்துவரும் மக்கள் தொகை உள்ளிட்ட காரணங்களால் மேலதிக வறுமை ஒழிப்பை உறுதி செய்ய இயலவில்லை என்று உணர முடிகிறது. சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து போன்றவற்றிற்காக நாம் செலவழிக்கும் தொகையும் உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகக் குறைவு என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. எது எப்படியோ, ஏற்றத் தாழ்வுகள் உள்ள சமூகமாக நமது சமூகம் நீண்டகாலமாகவே நீடித்து வருகிற போதிலும் கூட பொருளாதார வளர்ச்சி, ஏற்றத்தாழ்வுகளின் அளவை அதிகரித்து விட்டதென்று எண்ணத் தோன்றுகிறது. அவ்வாராயின் அதனை கட்டுப்படுத்த வேண்டிய கடமை நமக்கு உள்ளது. வறுமையின் வேகம் குறைந்தாலும் சோகம் மறையவில்லை என்பது 21ம் நூற்றாண்டுக்குப் பொருத்தமானதாக இருக்க முடியாது. அனைவருக்கும் அவசரம் தேவை.



# திறப்பு விழா அழைப்பிதழ்




**மதுரையில் இப்பொழுது**
**ஏற்றுமதி தரம் வாய்ந்த**

# a-1 Chips
## Express

*House of Savouries & Sweets*

## காரம் & இனிப்பு வகைகள்

நாள் : **18.10.2019 வெள்ளிக்கிழமை**
நேரம் : காலை 8.00 மணிக்கு
இடம் : பிளாக் No. 5, No. : 1, மங்கம்மாள் சத்திரம் காம்பளக்ஸ்,
இரயில்வே நிலையம் எதிரில், மேல வெளிவீதி, மதுரை.


8489000444, 9025222225 a1chipsmadurai@gmail.com
www.a1chipsmadurai.in a1chipsmadurai

# நாட்டுக்கோழிகளைத் தாக்கும் வெள்ளைக்கழிச்சல் நோயும் தடுப்பு முறைகளும்

கிராமப்புறங்களில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளின் முட்டை மற்றும் இறைச்சி ஆகியன மக்களிடையே தொடர்ந்து சிறந்த வரவேற்பைப் பெற்று வருவதுடன், கிராம மக்களின் உணவில் விலங்கினப் புரதத்தை அளிப்பதில் அவை முக்கியப் பங்காற்றி வருகின்றன. நாட்டுக் கோழிகள் இயற்கையிலேயே நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவையாக இருந்தாலும் அவற் றுக்கும் சில நோய்களினால் இறப்புகள் ஏற்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானது வெள்ளைக் கழிச்சல் நோயாகும். திடீரென்று நாட்டுக் கோழிகள் அதிக அளவில் கிராமங்களில் இறப்பதற்குக் காரணம் வெள்ளைக் கழிச்சல் நோய் தான் காரணமாகும். இதனை கொக்கு நோய், இராணிக்கெட் நோய் என்றும் கூறுவர்.

வெள்ளைக்கழிச்சல் நோயானது நாட்டுக் கோழிகளை மிகக் கடுமையாகப் பாதித்து கோழிகளில் 20 முதல் 90 சதவிகிதம்; வரை இறப்பை ஏற்படுத்தும். இந்த நோய் குளிர்காலம் மற்றும் கோடைகாலப் பருவங்கள் மாற்றத்தின் போது அதிக அளவில் ஏற்பட்டாலும் ஆண்டு முழுவதும் நாட்டுக்கோழிகளைப் பாதிக் கிறது. இந்த நோய் காற்று, நீர், தீவனம், பறவைகள், பாதிக்கப் பட்ட கோழிகள் மற்றும் பண்ணையில் பணிபுரியும் ஆட்கள் மூலம் விரைவாகப் பரவும்.

## நோய் அறிகுறிகள்

வெள்ளைக் கழிச்சல் நோய் தாக்குதலினால் கோழிகளின் குடலும், நரம்பு மண்டலமும் பாதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட கோழிகள் தீவனம், நீர் உட்கொள்ளாது. வெள்ளையாகவோ, பச்சையாகவோ கழிவும். எச்சமிடும் போது ஒரு காலை மட்டும் தூக்கிக் கொள்ளும். சுவாச உறுப்புகள் தாக்கப்படுவதால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டு வாயினால் மூச்சு விடும்.

ஒரு சில கோழிகளில் கழுத்தைத் திருக்கிக் கொள்ளுதல், தலையை வேகமாகச் சுழற்றுதல் போன்ற அறிகுறிகளும் காணப்படும். இறக்கைகளும், கால்களும் செயலிழந்து துவண்டு

தொங்கும். கோழியின் வயிற்றுப் பகுதியில் ரத்தப் புள்ளிகளும், குடலில் புண்களும் காணப்படும். தலை முறுக்கிக் கொள்ளும். அதனால் கொக்கு போல் குறுகிக் கொண்டு நிற்கும். நோயின் அறிகுறிகள் தென்பட்ட 2வது அல்லது 3 வது நாளில் கோழிகளில் இறப்பு ஏற்படும்.

## தடுப்பு முறைகள்

வெள்ளைக்கழிச்சல் நோய் வந்த பிறகு குணப்படுவத்துவது மிகவும் கடினம். ஆனால் முறையாக தடுப்பூசி போடுவதன் மூலம் வெள்ளைக்கழிச்சல் நோயிலிருந்து நாட்டுக் கோழிகளை காப்பாற்ற முடியும். நாட்டுக்கோழிக் குஞ்சுகளுக்கு பிறந்த 7 வது நாளில் லசோட்டா என்ற தடுப்பு மருந்தை கண் அல்லது மூக்கில் சொட்டு மருந்தாகவும் பிறகு 21வது நாளில் லசோட்டா மருந்தை குடிக்கும் தண்ணீரிலும் கால்நடை மருத்துவர் ஆலோசனைப்படி கொடுக்க வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு, முனைவர். **இரா.உமாராணி,** பேராசிரியர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை – 5. தொலை பேசி எண் : 0452 2483903.

தொடரும்...



# கேந்தி பூக்கள் விலையின்றி பெரம்பலூர் விவசாயிகள் வேதனை

பெரம்பலூர், அக். 17

பெரம்பலூர் மாவட்டத்தில் கேந்தி பூச்செடிகளில் அதிகளவு பூக்கள் பூத்து குலுங்குகின்றன. ஆனால் பூக்களுக்கு மார்க்கெட்டில் சரி யான விலை கிடைக்காததால் விவசாயிகள் வேதனை அடைந்து உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் மழையின்றி வறட்சியான சூழல் நிலவு கிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து விவசாயம் பாதித்து, நெல், கரும்பு சாகுபடி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மழை குறைந்த தால், அளவான தண்ணீரை கொண்டு மகசூல் கொடுக்கும் பயிர் களை சாகுபடி செய்வதில் விவசாயிகளின் கவனம் திரும்பியுள்ளது.






இதனால் பல்வேறு இடங்களில் விவசாயிகள் கோவில்களுக்கும், பல்வேறு விசேங்களுக்கும் மாலையாக கட்டி பயன்படுத்தப்படும் கேந்தி பூக்களை சாகுபடி செய்து வருகின்றனர். விசேச காலங்களில் இந்த பூக்களால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும். இந்த கேந்தி பூக்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங் களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது கேந்தி பூச்செடிகளில் இருந்து அதிகளவு பூக்கள் பூத்து குலுங்குகின்றன. இதனை விவசாயிகள் பறித்து விற்பனைக்காக பெரம்பலூர், ஸ்ரீரங்கம் பூ மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். தற்போது தண்ணீர்பந்தல் அருகே கேந்தி பூக்கள் பூத்து குலுங்கின்றன. இருப்பினும் பூக்களின் விற்பனை மந்தமாக உள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், ஒரு ஏக்கர் நிலத்திற்கு சாகுபடி செய்யப்பட்டுள்ள கேந்தி பூக்களுக்கு ரூ.50 ஆயிரத்திற்கு மேல் செலவாகிறது. ஆயுத பூஜையையொட்டி கிலோ 40க்கு விலை போன கேந்தி பூக்கள் தற்போது ரூ.20க்கு தான் மார்க்கெட்டில் வியாபாரிகள் வாங்குகின்றனர். கேந்தி பூக்களை வாங்குவதற்கு வியாபாரிகள் ஆர்வம் காட்டுவதில்லை என்றார்.

# தமிழகத்தில் 5 நாட்களுக்கு கனமழை பெய்யும்

புது தில்லி, அக். 17

தமிழகத்தில் 5 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை முடிவடைந்த நிலையில், அதிக மழைப்பொழிவை கொடுக்கும் வடகிழக்கு பருவமழை அக்டோபர் 16ல் துவங்கியது. இந்த நிலையில் தமிழகத்தில் 5 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தென்மேற்கு வங்கக் கடல், தென் தமிழகத்தை ஒட்டிய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் 5 நாட்களுக்கு பரவலாக கனமழை நீடிக்கும். இதேபோல் புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களிலும் 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

VH VEDHAVALLI HOLIDAYS
Madurai & Tirunelveli
CONTACT US: Madurai +91 99430 31237 +91 91599 18447
Tirunelveli : +91 9843077518
A2/1,KK.NAGER,MAIN ROAD,Thulasi Pharmacy Near,Madurai-625020. @vedhavalliholidays

# நீர் பாசனம் இன்றி கருகும் நெற்பயிர்கள்

காஞ்சிபுரம், அக். 17

நீர் பாசன வசதி இல்லாததால், 50 ஏக்கர் நெற்பயிர், நீரின்றி கருகுவதாக, விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர். காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஒன்றியம், மேல்பொடவூர், சிங்காடிவாக்கம், பரந்தூர் உள்ளிட்ட பல கிராமங்களில், மானாவாரி நிலங்களில் விவசாயிகள் நெல் விதைத்துள்ளனர். நெற்கதிர் எடுக்கும் நிலையில் உள்ளது. போதிய தண்ணீர் இல்லாததால், மேல்பொடவூர் கிராமத்தில் 50க்கும் மேற்பட்ட ஏக்கரில், நெற்பயிர் கருகி வருகிறது. இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது: பொதுவாக தென்மேற்கு பருவ மழைக்கு, பாதி ஏரி நிரம்பி இருக்கும். ஆடி, ஆவணி மாதங்களில், விதைத்த நெல்லுக்கு நீர்பாசனம் எளிதாக கிடைக்கும். அதன் பின் பெய்யும் வடகிழக்கு பருவ மழைக்கு ஏரியில் நிரம்பும் தண்ணீரால் நெல் அறுவடையை முடித்து விடலாம். தென்மேற்கு பருவ மழைக்கு ஏரிகளில் சொற்ப நீரே நிரம்பியுள்ளது. அவ்வவ்போது பெய்ய வேண்டிய மழையும் பெய்யவில்லை. ஏரியில் இருக்கும் கொஞ்சம் தண்ணீரும் பாசனத்திற்கு திறந்துவிட முடியாது. இதனால், நெற்பயிர் கருகி வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# நீலகிரியில் தென் மேற்கு பருவமழை அதிகம்

ஊட்டி, அக். 17

நீலகிரியில் கடந்த 20 ஆண்டுக்கு பின் தென் மேற்கு பருவ மழை, 40 சதவீதம் அதிகமாக பெய்துள்ளது என ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரியில் ஜூன் மாதத்தில் தொடங்கும் தென் மேற்கு பருவமழை ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கும். அக்டோபர் மாதத்தில் தொடங்கும் வடகிழக்கு பருவமழை நவம்பர் மாதம் வரை நீடிக்கும்.

இந்நிலையில், நடப்பாண்டில் தென் மேற்கு பருவமழை ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கியது. வழக்கத்துக்கு மாறான இந்த மழை அனைத்து பகுதிகளிலும் கனமழையாக இருந்தது. கோவை வேளாண் பல்கலைக்கழக ஆய்வறிக்கையிலிருந்து, நீலகிரி மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பியுள்ள குறிப்பில் கூறியுள்ளதாவது: நீலகிரியில், சமீபத்தில் பெய்த மழையில் வழக்கத்துக்கு மாறாக அவலாஞ்சியில் பகுதியில் மட்டும், தென் மாநிலங்களில் அதிகள விலான, ஒரே நாளில் ஆகஸ்ட் 9ம் தேதி, 911 மி.மீ., மழை பெய்தது. மேலும், தென் மேற்கு பருவமழை காலத்தில் சராசரி அளவான, 874 மி.மீ., மழை பொழிவுக்கு பதிலாக, நடப்பாண்டில், 1,221 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இது சராசரியை விட, 40 சதவீதம் கூடுதலாகும். இந்த கன மழை காரணமாக மலைப்பகுதியை ஒட்டியுள்ள சரிவான இடங்களில் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டதோடு, சாலைகளும் பாதிக்கப்பட்டன.

நீலகிரியில், ஆண்டில் சராசரியாக, 474 மி.மீ., மழை பெய்ய வேண்டும். தற்போது, நிலவும் காலநிலையில் பெரிய அளவில் மாற்றம் ஏதும் இருக்காது. இதனால், வட கிழக்கு பருவமழை தென் மேற்கு பருவ மழையின் அளவுக்கு இருக்க வாய்ப்பில்லை. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பர வீடியோ





# பொறைவாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க கோரிக்கை

கடலூர், அக். 17

பொறைவாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலூர் மாவட்டம், சீர்காழி பகுதியில் பொறைவாய்க்கால் செல்கிறது. இதன் மூலம் திருமுல்லைவாசல், தொடுவாய், கூழையாறு, ராதாநல்லூர், தாழந்தொண்டி, வழுதலைக்குடி, வருசபத்து, எடமணல், ஆமப்பள்ளம், கடவாசல், வடகால், விநாயகக்குடி, செம்மங்குடி, விளந்திடசமுத்திரம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.




இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக மேற்கண்ட வாய்க்காலில் தண்ணீர் செல்லாததால் விவசாயிகள் நாற்று விட்டு நடுவதற்கு பதிலாக நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதேபோல் இந்த ஆண்டும் வாய்க்காலில் தண்ணீர் செல்லவில்லை. இதனால் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்தனர். தற்போது நெற்பயிர்கள் சிறிது வளர்ந்து உள்ளது. ஆனால் மழை பெய்யாததாலும், பொறை வாய்க் காலில் தண்ணீர் செல்லாததாலும் நெற்பயிர்கள் கருகும் அபாயம் உள்ளது. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

எனவே பொதுப்பணி துறையினர் பொறைவாய்க்காலில் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட்டு கருகும் நிலையில் உள்ள சம்பா நேரடி நெற்பயிர்களை காப்பாற்ற வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வருமானத்தில் 37 சதவீதம் வேளாண் துறை மூலம் மட்டுமே கிடைக்கிறது

கோவை, அக். 17

நாட்டின் ஒட்டுமொத்த வருமானத்தில் 37 சதவீதம் வேளாண் துறையின் மூலமாக கிடைத்து வருவதாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் கே.ராமசாமி தெரிவித்தார்.

கோவை, பெரியார் பல்கலைக்கழக அறிவியல் துறைகள் சார்பில், வேளாண்மை, சூழல் மண்டலம் மற்றும் சுற்றுச்சூழலின் அவசியம் என்ற தலைப்பில் 4ஆவது தேசிய அளவிலான மாநாடு மூன்று நாள்களுக்கு நடத்தப்படுகிறது. இதற்கான தொடக்க விழா பெரியார் பல்கலைக்கழக ஆட்சிப் பேரவைக் கூடத்தில் நடைபெற்றது.

மாநாட்டினை தொடங்கி வைத்து, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் கே.ராமசாமி பேசியது : முந்தைய காலங்களில் வேளாண்மை என்பது வாழ்வியலோடு இணைந்து இருந்தது. தற்போது விவசாயத்தில் நிறைய இடர்பாடுகள் வந்து விட்டன. தங்களுடைய வாரிசுகள் வெயிலில் வாடி வேலை செய் வதை விவசாயிகளே விரும்புவதில்லை. அதில் ஏற்படும் சிரமம் அவர்களை அப்படி யோசிக்க வைக்கிறது.

நாடு சுதந்திரம் அடைந்த போது, 30 சதவீத மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தி இருந்தது. ஆனால், தற்போது, 284 மில்லியன் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 340 மில்லியன் டன் காய்கறிகள், பழங்கள் உற்பத்தி செய்யப்படு கின்றன. நாட்டின் ஒட்டுமொத்த வருமானத்தில் 37 சதவீத வருமானம் வேளாண் துறையின் மூலம் கிடைத்து வருகிறது.

அரிசி, காய்கறிகள் மூலம் ரூ.37 லட்சம் கோடி வருமானம் கிடைக் கிறது. ஆனால், விவசாயிகளுக்கு உழைப்புக்கு தகுந்த ஊதியம் கிடைப்பதில்லை. கார் காலம், கூதிர் காலம், இளவேனில், முது வேனில், முன்பனி, பின்பனி ஆகிய 6 பருவங்களாக இருந்து விவசாய உற்பத்தி பருவம் தற்போது, குறுவை, சம்பா என மாறிவிட்டது.

மூலத்தை தெரிந்து விஞ்ஞானத்தை பயன்படுத்தும் போது, வேளாண்மையில் முழுமையான வெற்றி கிடைக்கும். இயற்கை யோடு இணைந்த விஞ்ஞானத்தை கண்டறிய வேண்டும். விவசாயிகளின் எண்ணங்களுக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ற தீர்வு விஞ்ஞானம் மூலம் கிடைக்கும் என்றார் அவர்.




Shop Online @ www.arrssilks.in

7,8,9 தேர்வீதி,
சேலம் 1, 0427 2267578

316, ஓமலூர் மெயின் ரோடு, ஸ்வர்ணபுரி,
சேலம் 4, 0427 2444678

108,110 சேலம் மெயின் ரோடு,
நாமக்கல் 1, 04286 275122

2, பழைய பெங்களூர் மெயின் ரோடு,
ஓசூர் 109, 04344 247474

30,சேக்குப்பேட்டை நடுத்தெரு,
காஞ்சிபுரம் 501, 044 27235578

விரிவுபடுத்தப்பட்ட கார் பார்கிங் வசதி | அனைத்து தளங்களிலும் இலவசம் WIFIவசதி | International Shipping Available.




சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை வட்டம், சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவிகள் மித்ராவயல் மற்றும் பெத்தாச்சிக் குடியிருப்பு ஆகிய கிராமங்களில், மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் வேம்பு சார்ந்த பொருட்களின் நன்மைகள் மற்றும் அதன் வழிமுறைகளை எடுத்துத்துரைத்தனர்.




டெங்கு
காய்ச்சல் தடுப்பு
மருத்துவ முகாம்

நாள் : 20.10.2019, ஞாயிற்றுக்கிழமை

100% நலம் ★ CURE

ஹோமியோபதி கிளினிக்
HOMEOPATHY CLINIC

No. 155 B வக்கில் புது தெரு, சிம்மக்கல், மதுரை - 625 001
8270707006 homeopathycure100@gmail.com www.curehomeopathy.in

# நெல் பயிரில் இலைச்சுருட்டு புழு கட்டுப்படுத்த வேளாண் துறை ஆலோசனை



புதுக்கோட்டை, அக். 17

நெல் சாகுபடியில் இலைச்சுருட்டுபுழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்தி உயர் விளைச்சல் பெற புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சுப்பையா கேட்டுக் கொண்டுள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறியதாவது: இலைச்சுருட்டு புழுக்கள் நெற் பயிரின் இலைகளிலுள்ள பச்சையத்தைச் சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை வெள்ளையாகக் காணப்படும். இவ்வாறு பச்சையம் முழுவதும் சுரண்டப்பட்ட நிலையில் பயிர் எரிந்தது போல் காணப்படும். இதன் தாக்குதல் வயல் ஓரங்களில் நிழலான பகுதி களிலும் அதிக உரம் இட்ட பகுதிகளிலும் மிகுந்து காணப்படும். புரட்டாசி மாதத்திலிருந்து மார்கழி மாதம் வரை தாக்குதல் அதிகமிருக்கும்.

இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்திட வரப்புகளைத் தூய்மை யாக வைத்திருக்க வேண்டும். தழைச்சத்தினைப் பரிந்துரை அளவுக்கு மேல் இடாமல், தேவையான தழைச்சத்தினை மூன்று அல்லது நான்கு தடவையாகப் பிரித்து இட வேண்டும். விளக்குப் பொறியினை மாலை 6.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை எரிய விட்டுத் தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்தழிக்க லாம். முட்டை ஒட்டுண்ணி யான டிரைக்கோகிரம்மா கைலோ னிஸ் ஏக்கருக்கு இரண்டு சிசி அளவு நடவு செய்த 37, 44 மற்றும் 51ம் நாட்களில் காலை நேரத் தில் வயலில் விட்டு இப்புழுவின் முட்டைக் குவியலை அழிக்கலாம்.



ஒரு கூடைத் தவிட்டில் 100 மிலி மண்ணெண் ணெய்யைக் கலந்து வயலில் விசிறுதல் வேண்டும். ஏறத்தாழ எட்டடி நீளமுள்ள வைக் கோல் பிரியை வயலின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கொருவர் பிடித்துக்கொண்டு நெற் பயிரின் மேல் நன்கு படுமாறு இழுத்துச் செல்ல வேண்டும். இதனால் நெல்லின் இலைப்பகுதி வைக்கோல் பிரியில் பட்டு நிமிரும்போது மடக்கப்பட்ட பகுதி விரிந்துவிடும். இப் புழுக்கள் கீழே விழுந்து மண்ணெண்ணெய் கலந்த நீரில் விழுந்து மடிந்து விடும்.



இலைச்சுருட்டுபுழுவின் தாக்குதல் மட்டுப்படவில்லையெனில், ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 4G என்ற குருணை மருந்தினை 7.5 கிலோ முதல் 10 கிலோ வரை மண்ணில் இட வேண்டும் அல்லது தையோமெத்தோசம் 25 WG 40 கிராம், டிரைஅசோபாஸ் 40 EC 250 மி.லி. முதல் 500 மி.லி. வரை, குளோர்பைரிபாஸ் 20 EC 750 மி.லி. வரை, குளோரான் டிரானிலிபுரோல் 24 SC 30 மி.லி. முதல் 40 மி.லி. வரை, புளுபென்டையமைடு 39.45 EC 30 மி.லி. முதல் 40 மி.லி. வரை, பிப்ரோனில் 80 WG 20 கிராம் முதல் 25 கிராம் வரை இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை 200 லிட்டர் நீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

எனவே ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையில் இலைச் சுருட்டு புழுவினைக் கட்டுப்படுத்திப் பயன் பெறுமாறு வேளாண்மை இணை இயக்குநர் மு.சுப்பையா தெரிவித்து உள்ளார்.




# பெரியாறு அணைக்கு நீர்வரத்து உயர்வு

தேனி, அக். 17

நீர்பிடிப்பில் மழை காரணமாக பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக நீர்வரத்து 1976 கன அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு குடிநீர் மற்றும் விவசாயத்திற்காக 1400 கன அடி நீர் திறந்து விடப்பட்டு உள்ளது. பெரியாறில் 2.8, தேக்கடியில் 1.4 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. அணையின் நீர்மட்டம் 123.40 அடியாக (மொத்த உயரம் 152 அடி) இருந்தது. நேற்று மாலையில் நீர்பிடிப்பில் மழை பெய்ததால் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் 60.24 அடியாக (மொத்த உயரம் 71 அடி) இருந்தது. நீர்வரத்து 1327 கன அடியாகவும், நீர்திறப்பு 1190 கன அடியாகவும் இருந்தது.

# திண்டுக்கல் மாவட்டத்தில் கண்வலிக்கிழங்கு பயிரில் மகரந்தச் சேர்க்கை பணி தீவிரம்

திண்டுக்கல், அக். 17

ஒட்டன்சத்திரம், தொப்பம்பட்டி ஒன்றியங்களில் கண்வலிக்கிழங்கு பயிர்களுக்கு மகரந்தச் சேர்க்கை செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியம், சத்திரப்பட்டி, கோடாங்கிப்பட்டி சுற்று வட்டார பகுதிகள் மற்றும் தொப்பம்பட்டி ஒன்றியத்தில் தேவத்தூர், கப்பலபட்டி, கொத்தயம், அம்பிளிக்கை, கள்ளிமந்தயம் உள்பட 50க்கும் மேற்பட்ட ஊர்களில் ஆயிரக் கணக்கான விவசாயிகள் கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்து உள்ளனர். கண்வலிக்கிழங்கு பயிரானது செம்மண் சார்ந்த விளைநிலங்களில் நன்கு வளர்ந்து விளைச்சல் கொடுக்கக்கூடியது.

அளவான பனி, தண்ணீர், வெப்பம், மழை போன்றவை இருந் தால் மட்டுமே முழுமையாக விளைச்சலை பெற முடியும். அந்த வகையில் சத்திரப்பட்டி மற்றும் தொப்பம்பட்டி ஒன்றிய பகுதிகளில் கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்ய ஏற்ற சூழல் நிலவுவதால் விவசாயிகள் அதிகளவில் கண்வலிக்கிழங்கு சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் தற்போது கண்வலிக்கிழங்கு பயிரில் மகரந்தச் சேர்க்கை செய்யும் பணிகள் நடந்து வருகிறது.

இது குறித்து அப்பகுதி விவசாயிகள் கூறுகையில், கண்வலிக் கிழங்கு நடவு செய்த 6 மாதங்களில் விளைச்சல் கொடுக்கும். நடவு, பந்தல் அமைத்தல், உரமிடுதல் மற்றும் மருந்து தெளித்தல் போன்றவற்றுக்கு ஏக்கருக்கு சுமார் ரூ.10 லட்சம் வரை செலவாகும். தற்போது மழைக்காலம் தொடங்க உள்ளதால் மகரந்தச்சேர்க்கை பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. கண்வலிக்கிழங்கு சாகுபடி யில் போதிய வருமானம் கிடைத்தாலும் தரகர்கள் தலையீடால் விவசாயிகள் நஷ்டமடைகின்றனர்.

மேலும் விலையும் நிரந்தரமாக இல்லை. அதாவது கடந்த ஆண்டு கிலோ கண்வலிக்கிழங்கு விதை ரூ.3,000 வரை மொத்த வியா பாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் தற்போது ரூ.2,000க்கு கொள்முதல் செய்யப்படுவதாக விவசாயிகள் கூறு கின்றனர். எனவே அரசே கண்வலிக்கிழங்கு விதைகளை கொள் முதல் செய்ய வேண்டும். இதற்கும் பயிர் காப்பீடு உள்ளிட்ட வசதி களை ஏற்படுத்த வேண்டும் என்றனர்.

ஒரு வேளை
மிஸ் பண்ணினாலும்...
பீல் பண்ணணும்.........
அதுதான் சக்தி மசாலா !



I ♥ FOOD

சக்தி மசாலா ...
அன்பின் சுவையான
அடையாளம் ...

CLICK HERE

சக்தி®
மசாலா

சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com




பொன்னமராவதி வட்டாரத்தில் தேனிமலையில் புதுக்கோட்டை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை வாயிலாக தூய்மை இந்தியா 2019 முகாம் நடத்தப்பட்டது. முகாமில் **SSR** பாலிடெக்னிக் மாணவர்கள், கிராம உதவி அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டு, தூய்மை இந்தியா உறுதி மொழி எடுத்தனர். இம்முகாமில் வேளாண்மை துணை இயக்குனர் பொறுப்பு ரா.ஜெகதீஸ்வரி, நீர்வடிப்பகுதி பொறி யாளர் ரங்கராஜ் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் வாயிலாக நடத்தப் பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் கற்றறிவு பயணம் குறித்தான ஆய்வினை சிவகங்கை மாவட்ட நீர்வடிப்பகுதி முகமையின் துணை இயக்குனர் மேற்கொண்டார்.

# ஏலக்காய் விலை சரிவு



தேனி, அக். 17

தேனி மாவட்டம், கம்பம், ஏலக்காய் கிலோவிற்கு ரூ.500 வரை சரிவடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்து உள்ளனர். ஏலக்காய் விலை எப்போதும் நிலையாக இருந்தது இல்லை. இந்த சீசனில் சீதோஷ்ண நிலை மாற்றத்தால் கேரளா, இடுக்கி மாவட்ட ஏலத்தோட்டங்களில் காய் இல்லையென்பதால் சராசரி விலையே கிலோவிற்கு ரூ.3 ஆயிரத்திற்கும் மேல்சென்றது. செப்டம்பர் 27ல் சராசரி விலை கிலோவிற்கு ரூ.3,064 கிடைத்தது. அதன்பின் விலையில் ஏற்ற இறக்கமாகவே இருந்தது. இந்நிலையில் அக்டோபர் 15ல் கிலோவிற்கு ரூ.500 வரை குறைந்து சராசரி விலை கிலோவிற்கு ரூ.2,534 மற்றும் ரூ.2,568 என இருந்தது. இந்த சீசனில் மகசூல் கடுமையாக பாதிக்கும் என்ற நிலை உள்ளது. ஏற்றுமதி இல்லாதநிலையிலும் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.



# மாற்றுப்பயிர் சாகுபடியில் ஈடுபட விவசாயிகளுக்கு ஆலோசனை

தஞ்சாவூர், அக். 17

விவசாயிகள் மாற்றுப்பயிர் சாகுபடியில் ஈடுபட வேண்டுமென வேளாண்துறை ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் (பொ) சா.சங்கீதா வெளியிட்ட செய்திக்குறிப்பு: விவசாயத்தில் ஒரே பயிரை தொடர் ந்து சாகுபடி செய்வதால், பல்வேறு வகையான பூச்சி நோய்களின் உற்பத்தி மையமாக சாகுபடி செய்யப்படும் வயல்கள் மாறுகின்றன. எனவே, ஒரு பயிருக்கு அடுத்து, அதே பயிரை தேர்வு செய்யாமல் பயறு வகைப்பயிர் அல்லது எண்ணெய் வித்து பயிர் சாகுபடி செய்வதன் மூலம் மண்ணில் உள்ள சத்துகள் முழுவதும் வீணாகாமல் அதிக மகசூல் பெற்று நீடித்த, நிலையான வேளாண்மைக்கு வழி வகுக்கும்.

பயறு வகைப் பயிர்களான உளுந்து, பாசிப்பயறு, தட்டைப் பயறு ஆகியவற்றை பயிர் செய்வதன் மூலம் பயிரின் வேர் முடிச்சுகள் மூலம் தழைச்சத்தை சேர் ப்பதுடன், மிகக் குறைந்த நீர் தேவையில் அதிக வருமானம் பெற உதவுகிறது. வளம் குறைந்த மண்ணாக இருந்தால், பசுந்தாள் உர பயிரை குறிப்பாக கொளுஞ்சி, தக்கைப்பூண்டு, சணப்பை, கொள்ளு போன்ற குறைந்த நீரில் வளர உகந்த பயிர்களைத் தேர்ந் தெடுத்து விதைப்பு செய்ய வேண்டும். அதன்பிறகு, 1 மாதம் கழித்து, அதாவது பூ பூக்கும் தருணத்தில் அதனை மடக்கி உழவு செய்வதன் மூலம் மண்ணானது வளம் பெறும்.

களர் அல்லது உவர் மண் பகுதிகளில் மிகவும் நெருக்கமாக தக்கைப்பூண்டு 1 ஏக்கருக்கு 20 கிலோ என்ற அளவில் விதைத்து, பூ பூக்கும் தருணத்தில் பயிரை மடக்கி உழவு செய்து மண்ணில் வளரவுள்ள பல்வேறு களைகளை கட்டுப்படுத்தலாம். விவசாய வேலைக்கு ஆள்கள் கிடைப்பது கடினமாக இருப்ப தால், பலர் பயிர் சாகுபடியை விட்டு விடுகின்றனர். இதனால், களை செடிகள் வளர்ந்து அடுத்த பயிர் சாகுபடியில் பெரும் மகசூல் இழப்பை ஏற்படுத்தி விடும். எனவே, இனி வரும் காலங்களில் சாகுபடியில் மகசூல் அதிகரிக்கவும், மண் வளம் காக்கவும் விவசாயிகள் மாற்றுப்பயிரை சாகுபடி செய்ய வேண்டும்.


ARRS சில்க்ஸின்
நம்ம வீட்டு
தீபாவளி
கொண்டாட்டம் ஆரம்பம்
இல்லந்தோறும் ஒளிமிகு
தீபங்களையேற்றி கொண்டாடும்
நம்மவீட்டு தீபாவளியை
ARRS சில்க்ஸின் வண்ணமிகு புத்தாடைகளுடன்
கொண்டாடி மகிழ்வோம்.
PUZZLE
CAR PARKING
100 கார்கள் பார்க்கிங்
செய்யும் வசதி உள்ளது
ONLY ON CAR STREET SHOWROOM
ARRS சில்க்ஸ்
சேலம் | நாமக்கல் | ஓசூர் | காஞ்சிபுரம்
BAJAJ FINSERV
Cash Back upto ₹250*
Offer from 1st to 27th Oct
* for purchase more than Rs. 6,000/-
Shop Online @ www.arrssilks.in
7,8,9 தேர்வீதி,
சேலம் 1, 0427 2267578
316, ஓமலூர் மெயின் ரோடு, ஸ்வர்ணபுரி,
சேலம் 4, 0427 2444678
108,110 சேலம் மெயின் ரோடு,
நாமக்கல் 1, 04286 275122
2, பழைய பெங்களூர் மெயின் ரோடு,
ஓசூர் 109, 04344 247474
30,சேக்குப்பேட்டை நடுத்தெரு,
காஞ்சிபுரம் 501, 044 27235578
விரிவுபடுத்தப்பட்ட கார் பார்கிங் வசதி | அனைத்து தளங்களிலும் இலவசம் WIFIவசதி | International Shipping Available.

# சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க விண்ணப்பிக்கலாம்



பெரம்பலூர், அக். 17

2019-20ம் நிதியாண்டில் சூரிய கூடார உலர்த்திகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் வே.சாந்தா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சூரிய சக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வேளாண் விளைபொருள்களை சூரியசக்தி மூலம் உலர்த்தி பதப்படுத்த பெரம்பலூர் மாவட்டத்துக்கு 2019-20ம் நிதியாண்டுக்கு 7 சூரிய கூடார உலர்த்திகள் அமைக்கப்பட உள்ளன.

ஒரு சூரிய கூடார உலர்த்தி அமைக்க 400 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரை ரூ. 3 லட்சம் முதல் ரூ. 7 லட்சம் வரை செலவாகிறது. இதில், சிறு, குறு ஆதிதிராவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு ரூ.3.50 லட்சம் வரையிலும், இதர விவசாயிகளுக்கு ரூ. 3 லட்சம் வரையிலும் மானியம் வழங்கப்படுகிறது.

சூரிய கூடார உலர்த்திகள் மூலம் விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருள்களான மிளகாய், கொப்பரை தேங்காய், வெண்டை, கொத்தவரை உள்ளிட்ட பொருள்களை உலர்த்தி பதப்படுத்தி வைத்து, வேளாண் விளை பொருள் களுக்கு சந்தையில் உரிய விலை கிடைக்கும்போது விற்பனை செய்து கூடுதல் வருமானம் பெற இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும். இவ்வகை உலர்த்திகளில் காய வைக்கப்படும் வேளாண் விளை பொருள்களின் தரமும் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பத்துடன், அண்மையில் எடுக்கப்பட்ட 2 புகைப்படம், நில வரைபட நகல், அடங்கல், கணினி சிட்டா, இத்துறை மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப் புள்ளி ஆகிய ஆவணங்களுடன் பெரம்பலூர் வேளாண் பொறியியல் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்து, முன்னுரிமை அடிப்படையில் சூரிய கூடார உலர்த்தியை அரசு மானியத்துடன் அமைத்துப் பயன்பெறலாம்.

# இயற்கை நுண்ணுயிர் உயிர் எதிர்கொல்லி உற்பத்தி செய்ய இலக்கு

கோவை, அக். 17

உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் நடப்பு ஆண்டு 40 ஆயிரம் கிலோ இயற்கை நுண்ணுயிர் உயிர் எதிர்கொல்லி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேளாண், தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்படும் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேளாண் துறை சார்பில் இயற்கை நுண்ணுயிர் உயிர் எதிர்கொல்லிகள் விவசாயிகளுக்கு வழங்கப் படுகிறது. இதில் டிரைக்கோடெமா விரிடி, சூடோமோனாஸ் ப்ளோர சன்ஸ், பெவேரிஸ் பேசியானா குறிப்பிடத்தக்கவை. இவை பூஞ் சாணம் வகையை சேந்தவை. இந்த நுண்ணுயிர் உயிர் எதிர் கொல்லிகள் அந்தந்த மாவட்ட வேளாண் துறை சார்பில் உற்பத்தி செய்யப்படுகிறது. கோவை மாவட்டத்தில், வேளாண் இணை இயக்கு நர் அலுவலக வளாகத்தில் செயல்படும் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் உற்பத்தி செய்யப்படும் நுண்ணுயிர் உயிர் எதிர் கொல்லிகள் வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் டிரைக்கோடெமா விரிடி 20,000 கிலோ, சூடோ மோனாஸ் ப்ளோரசன்ஸ் 5,000 கிலோ, பெவேரிஸ் பேசியானா 15,000 கிலோவும் உற்பத்தி செய்ய நடப்பு ஆண்டு இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து நுண்ணுயிர் உயிர் எதிர்கொல்லி உற்பத்தி பணிகளை வேளாண் துறையினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இது குறித்து வேளாண் இணை இயக்குநர் ஆ.சித்ராதேவி கூறிய தாவது: பயறு வகைப் பயிர்கள், காய்கறிகள் உள்பட பயிர்களில் ஏற்படும் வேர் அழுகல், வாடல் நோய், நாற்றுழுகல், கழுத்தழுகல், கிழங்கழுகல் நோய்களைக் கட்டுப்படுத்த இந்த நுண்ணுயிர் உயிர் எதிர்கொல்லிகள் பயன்படுகின்றன. இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் நுண்ணுயிர் உயிர் எதிர்கொல்லிகளை விதை நேர்த்தி, இலைத்தெளிப்பு வழியாக பயன்படுத்தலாம். இவை விவசாயிகளுக்கு மானியத்தில் விற்பனை செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதுவரை 3,800 கிலோ சூடோமோனாஸ் ப்ளோர சன்ஸும், 8,100 கிலோ பெவேரிஸ் பேசியானாவும், 3 ஆயிரம் கிலோ டிரைக்கோடெர்மா விரிடியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றார்.

TOUCH AND SEE

# உழவால் உயர்வோம் காணொளிகள்













## agridoctor.tv Live












# வேளாண் பொருட்கள் வாங்க விற்க



### தேங்காய்

தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த செல்வன் தம்மிடம் 3000 கிலோ தேங்காய் இருப்பு உள்ளதாகவும் ஒரு கிலோ 35 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 63822 89245**

### கொய்யா

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த நாகராஜன் தம்மிடம் 10 டன் அளவுக்கு கொய்யா இருப்பு உள்ளதாகவும் ஒரு டன் 40000 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்து உள்ளார்.

**தொடர்புக்கு : 97876 38489**

### குள்ளகார் அரிசி

திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த சதீஸ்குமார் தம்மிடம் 625 கிலோ குள்ளகார் அரிசி இருப்பு உள்ள தாகவும் ஒரு கிலோ 60 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 86674 68911**

### முந்திரி பருப்பு

கடலூர் மாவட்டத்தை சேர்ந்த சந்தோஷ்குமார் தம்மிடம் 10000 கிலோ முந்திரி பருப்பு இருப்பு உள்ள தாகவும் ஒரு கிலோ 700 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 63791 21977**

### ஹைபிரிட் சம்பங்கி கிழங்கு

விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த சரத்குமார் தம்மிடம் 1000 கிலோ ஹைபிரிட் சம்பங்கி கிழங்கு இருப்பு உள்ள தாகவும் ஒரு கிலோ 30 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 98946 74099**





## சூப்பர் நேப்பியர் புல்

கடலூர் மாவட்டத்தை சேர்ந்த கந்தன் தம்மிடம் 20000 சூப்பர் நேப்பியர் புல் இருப்பு உள்ளதாகவும் ஒன்று 1 ரூபாய்க்கு விற்ப தாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 99438 17001**

## தேங்காய் எண்ணெய்

விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த சரவணன் தம்மிடம் 100 லிட்டர் அளவுக்கு தேங்காய் எண்ணெய் இருப்பு உள்ளதாகவும் ஒரு லிட்டர் 220 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 63806 18042**

## மாடித்தோட்ட விதைகள்

கடலூர் மாவட்டத்தை சேர்ந்த ராஜேஷ் தம்மிடம் 1000 பாக்கெட் மாடித்தோட்ட விதைகள் இருப்பு உள்ளதாகவும் ஒரு பாக்கெட் 20 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 87780 76964**

## மல்லிகை செடி

ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த வெங்கடேஸ்வரன் தம்மிடம் 40000 மல்லிகை செடி இருப்பு உள்ளதாகவும் ஒன்று 3 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 90951 59832**

## மணத்தக்காளி வத்தல்

நாகப்பட்டினம் மாவட்டத்தை சேர்ந்த சாய் அருள்தாஸ் தம்மிடம் 80 கிலோ மணத்தக்காளி வத்தல் இருப்பு உள்ளதாகவும் ஒரு கிலோ 400 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 96292 79243**

## தேன்

கடலூர் மாவட்டத்தை சேர்ந்த பிரபாகரன் தம்மிடம் 10 லிட்டர் தேன் இருப்பு உள்ளதாகவும் ஒரு லிட்டர் 450 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 87789 04182**

## வான்கோழி

திருச்சி மாவட்டத்தை சேர்ந்த சதீஸ்குமார் தம்மிடம் 20 கிலோ வான்கோழி இருப்பு உள்ளதாகவும் ஒரு கிலோ 280 ரூபாய்க்கு விற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**தொடர்புக்கு : 97894 78071**

பொறுப்பு துறப்பு : விவசாயிகளுக்கு தங்கள் பொருட்களை விற்பனை செய்ய உதவியாகவே இந்த வாங்க விற்க பகுதி. விவசாயப்பொருட்கள், அவற்றின் தரம், அளவு, விற்பனை விலை, பணப் பரிவர்த்தனை, விற்பனைக்குப் பிந்தைய சேவைகள் என எதற்கும் அக்ரி டாக்டர் சேனல் பொறுப்பாகாது. அனைத்தும் விற்பவர், வாங்குபவர் இருசாரார் பொறுப்பே ஆகும்.

ச... சமைச்சுப் பாரு ரி... ருசிச்சுப்பாரு க... கம கம ம... மணக்கும் பாரு
ப... பாராட்டுப்பாரு த... தரத்திலே நி... நிகரில்லை சச... சக்திமசாலா







சக்தி ®
மசாலா

சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com




• சக்தி மசாலா சமையல் பொடி வகைகள் • சக்தி ஊறுகாய் வகைகள் • சக்தி சன் பிளவர் ஆயில் • சக்தி பருப்பு வகைகள்
• சக்தி பஜ்ஜி போண்டா மாவு • சக்தி ராகி மாவு • சக்தி கடலை மாவு • சக்தி அப்பளம் • நெய்